# இந்தியா-அமெரிக்க கடல்சார் பாதுகாப்பு பேச்சுவார்த்தையின் இரண்டாம் சுற்று

**மே 11, 2017**

இந்தியா-அமெரிக்க கடல்சார் பாதுகாப்பு பேச்சுவார்த்தையின் இரண்டாவது சுற்று 9-ஆம் தேதி மே மாதம், 2017 ஆம் ஆண்டு ரோட் தீவு, நியூபோர்ட்டில் நடைபெற்றது. டாக்டர் பங்கஜ் சர்மா, கூட்டு செயலாளர் (D & ISA) மற்றும் திரு முனு மஹாவர், கூட்டு செயலாளர் (ஏ.எம்.எஸ்), வெளிவிவகார அமைச்சு மற்றும் திருமதி. தேவிகா ரகுவன்ஷி, கூட்டு செயலாளர் (கடற்படை), பாதுகாப்பு அமைச்சகம் ஆகியோர் இணைந்து இந்திய பக்கத்தினை தலைமை தாங்கினர். ஆசிய மற்றும் பசிபிக் பாதுகாப்பு விவகாரங்களுக்கான துணை உதவி செயலாளரின் கடமைகளை கவனித்து வரும் திரு. டேவிட் ஹெல்வே மற்றும் திரு. சீன் ஸ்டீன், தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான துணை உதவி செயலாளராக உள்ளவரும் அமெரிக்கத் தலைமையினை தலைமை தாங்கினார்.

இந்த பேச்சுவார்த்தையின் போது, இரு தரப்பினரும் ஆசிய-பசிபிக் மற்றும் இந்தியப் பெருங்கடல் பகுதியிலான கடல்வழி முன்னேற்றங்கள் பற்றிய கருத்துக்களை பரிமாறினர், அத்துடன் இருதரப்பு கடல் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த நடவடிக்கை எடுப்பது பற்றியும் கருத்து தெரிவித்தனர். 2016 மே மாதம் நடைபெற்ற முதல் கடல் பாதுகாப்பு பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட முடிவுகளை அவர்கள் மீளாய்வு செய்தனர்.

அடுத்த சுற்று பேச்சுவார்த்தை இந்தியாவில் பரஸ்பர வசதியான தேதியில் நடைபெறும்.

**புது தில்லி**
**மே 11, 2017**